தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 111/பேரூ/2022

நாள் 18.08.2022

திருமதி மா. சுசீலா,
காவேரிப்பட்டிணம், கிருஷ்ணகிரி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
காவேரிப்பட்டிணம் பேரூராட்சி,
கிருஷ்ணகிரி மாவட்டம் ... எதிர்மனுதாரர்

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் மற்றும் அஞ்சல், எண்.13–B சுபாஸ் சந்திரபோஸ் தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி. மா. சுசீலா (க/பெ அ. மாதேசன்) என்பவரின் 27.03.2020 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.05.2020ல் பெறப்பட்டு, 111/2022என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் மற்றும் அஞ்சல், எண்.13–B சுபாஸ் சந்திரபோஸ் தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி. மா. சுசீலா தமது புகார் மனுவில் தனது கணவர் திரு. அ. மாதேசன், காவேரிப்பட்டிணம் தேர்வுநிலை பேரூராட்சியில் 1.7.1995 முதல் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வந்தார் என்றும், தனது நண்பர்களுடன் சுற்றுலா சென்றபோது திருக்கடையூர் அபிராமி அம்மன் சன்னதியில் 21.7.2012 அன்று காணாமல் போய்விட்டார் என்றும், நண்பர்களால் தேடிப்பார்த்தும் கிடைக்காத நிலையில், பொறையார் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை (பதிவு எண்.288/2012 நாள் 27.8.2012) பதிவு செய்யப்பட்டு, காவல் அதிகாரிகளும் துண்டு பிரசுரம் மூலமாகவும், பத்திரிக்கை செய்தி

மூலமாகவும் அப்பகுதியில் பிரசுரித்தும், தேடியும் எங்குமே கிடைக்காததால், **16.6.2016ல்** எங்கு தேடியும் கிடைக்கவில்லை என்கின்ற சான்று பெற்று, அரசின் விதிமுறைகளின்படி ஓய்வூதியம் பெற காவேரிப்பட்டிணம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மூலம் மனு அளிக்கப்பட்டதன் அடிப்படையில், **22.7.2012** முதல் தமக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் மேற்படி கொடு ஆணையுடன் இணைத்தனுப்பபட்ட உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை கடிதம் நி.மு.எண்.பேஓச(2)/24167/அ1 நாள் 04.11.2016ல் குடும்ப ஓய்வூதியம் கோரும் நபர் பேரூராட்சியில் துப்புரவுப் பணியாளராகப் பணிபுரிவதால் இவருக்கு குடும்ப ஓய்வூதியத்தில் மருத்துவப்படி அனுமதியில்லை என குறிப்பிட்டு ஆணையிடப்பட்டதாகவும், ஆனால், தான் காவேரிப்பட்டிணம் தேர்வுநிலை பேரூராட்சியில் ஜான்சிராணி மகளிர் மன்றம் மூலம் ஒப்பந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் தினக்கூலியாக (தள்ளுவண்டிமூலம் வீடுகளில் குப்பை பெறுவது) 2007 முதல் பணிபுரிந்து வருவதாகவும், தினக்கூலியைத் தவிர (வேலைசெய்யும் நாட்களுக்கு மட்டும்) வேறு எவ்வித இதர படிகளும் வழங்கப்படவில்லை என்றும் தானும் பெற்றதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். தனக்கு குடும்ப ஓய்வூதியத்தில் மருத்துவப்படி வழங்காதது குறித்து காவேரிப்பட்டிணம் தேர்வுநிலை பேரூராட்சி, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தருமபுரி மண்டலம், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை ஆகிய அனைத்து அதிகாரிகளுக்கும் பலமுறை விண்ணப்பித்தும் இதுவரை 22.7.2012 முதல், தான் மனு அளிக்கும் நாள் வரை தனக்கு மருத்துவப்படி நிலுவைத் தொகை வழங்கப்படவில்லை என்றும், தான் திருமணமான நாளிலிருந்து அரசின் எந்தத் துறையிலும் அரசுப் பணியில் சேரவில்லை என்றும், மருத்துவப்படி தன்னால் பெறப்படவில்லை என்பதற்கு உறுதியளிக்கிறேன் என்றும், இதுகுறித்து காவேரிப்பட்டிணம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மூலம் உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறைக்கு **20.3.2017** மற்றும் **20.4.2018** ஆகிய நாளிட்ட கடிதங்களில் தெளிவுரை வழங்கப்பட்ட பின்னரும், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையிடமிருந்து எவ்விதமான தகவலோ அல்லது மருத்துவப்படி நிலுவைத் தொகையை ஒப்பளித்தோ தகவல் ஏதும் தனக்கு வழங்கப்படவில்லை என்றும், எனவே, **22.7.2012** முதல் **31.01.2020** வரையிலான கால நிலுவை ரூ.**14,632/–**யும் (ரூபாய் பதினான்காயிரத்து அறநூற்று முப்பத்தி இரண்டு மட்டும்) தொடர்ந்து தமக்கு குடும்ப ஓய்வூதியத்தில் மருத்துவப்படி கிடைத்திட விசாரணை மேற்கொண்டு, உரிய ஆணையினைப் பிறப்பிக்குமாறு கோரி இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார். மனுதாரர் தனது புகார் மனுவுடன், தொடர்புடைய ஆவணங்களின் நகல்களை ஆதார ஆவணங்களாக இம்முறைமன்ற நடுவத்திற்கு தனது புகார் மனுவுடன் இணைத்தனுப்பிவைத்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனுவின் அடிப்படையில், திருமதி. மா. சுசீலா என்பவருக்கு வழங்கப்பட்ட குடும்ப ஓய்வூதியத்தில், மருத்துவப்படி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டதா என்றும், ஆணை வெளியிடப்பட்டிருப்பின் அதன் நகல் சம்மந்தப்பட்ட பேரூராட்சிக்கு அனுப்பிவைக்கப்பட்டதா என்பதனையும், அதன் நகல் ஒன்றினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைக்குமாறும் உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை இயக்குநர் இம்முறைமன்ற நடுவத்தின் கடிதம் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டார்.

மேற்கண்ட கடிதத்தின் நகல் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர், காவேரிப்பட்டிணம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் திருமதி. மா. சுசீலா ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டன.

3. இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை கடிதம் மூ.மு.எண்.10924–2/பேஓச(2)/2021 6.7.2021 நாளிட்ட கடிதத்தில் தனியரின் குடும்ப ஓய்வூதிய கருத்துருவில் தனியர் காவேரிப்பட்டிணம் பேரூராட்சியில் சுயஉதவிக் குழு துப்புரவு பணியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு பணியாற்றி வருவதாக பணிச்சான்று அளிக்கப்பட்டதன் அடிப்படையில் தனியருக்கு குடும்ப ஓய்வூதியத்தில் மருத்துவப்படி அனுமதிக்கப்படவில்லை என்றும், பின்னர் திருமதி. மா. சுசீலா, க/பெ மாதேசன் என்பவர் காவேரிப்பட்டிணம் பேரூராட்சி பகுதியில் தள்ளுவண்டி மூலம் குப்பைகளை சேகரித்து அகற்ற ஒப்பந்த அடிப்படையில் செயல்படும் ஜான்சிராணி குழுவில் உள்ளார் என்றும், மேற்படி மகளிர் குழுவிற்கு மருத்துவப்படி ஏதும் வழங்கப்படுவதில்லை என்றும், தனியர் காவேரிபட்டிணம் பேரூராட்சியில் பணிபுரியவில்லை என்றும் காவேரிப்பட்டிணம் பேரூராட்சி செயல் அலுவலரால் சான்று வழங்கப்பட்டதனை ஏற்று திருமதி. மா. சுசீலா என்பவருக்கு 22.7.2012 முதல் குடும்ப ஓய்வூதியத்துடன் மருத்துவப்படி அனுமதித்து ஆணை வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். எனினும், தனியருக்கு மருத்துவப்படி ஒப்பளித்து வழங்கப்பட்ட ஆணை இம்முறைமன்ற நடுவத்திற்கு உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையின் மேற்கண்ட கடிதத்துடன் இணைத்தனுப்பப்படாததால், தனியருக்கு வழங்கப்படவேண்டிய மருத்துவப்படி நிலுவையுடன் வழங்கப்பட்டதா என்பதை தெளிவுபடுத்தி அறிக்கை அனுப்புமாறு உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை மற்றும் காவேரிப்பட்டிணம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

4. உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை இயக்குநரின் 6.7.2021 நாளிட்ட கடிதத்தில் திருமதி. மா. சுசீலா, க/பெ மாதேசன் என்பவருக்கு 22.7.2012 முதல் குடும்ப ஓய்வூதியத்துடன் மருத்துவப்படி அனுமதித்து நிலுவையுடன் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதன் நகல் காவேரிப்பட்டிணம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் திருமதி. மா. சுசீலா என்பவரது வீட்டு முகவரிக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. எனினும், தனியருக்கு மருத்துவப்படி வழங்கப்பட்டுவிட்டது என்பதற்கான அறிக்கையினையோ அல்லது தனியர் இம்முறைமன்ற நடுவத்தில் அளித்த புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையினையோ அல்லது இடைக்கால அறிக்கையையோ காவேரிப்பட்டிணம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைக்கவில்லை.

5. தனியர் இம்முறைமன்ற நடுவத்திற்கு அளித்த புகார் மனு நீண்டகாலமாக நிலுவையில் இருந்துவந்த நிலையில், தனியரது புகார் மனு மீது 8.8.2022 அன்று நேரடி விசாரணை நிர்ணயிக்கப்பட்டு அதில் கலந்துகொள்ளுமாறு மனுதாரர் மற்றும் காவேரிப்பட்டிணம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலமாக அழைப்பாணைகள் அனுப்பிவைக்கப்பட்டன.

6. மனுதாரர் இம்முறைமன்ற நடுவ 8.8.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை. ஆயினும், மின்னஞ்சல் மூலம் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைத்துள்ள 8.8.2022 நாளிட்ட கடிதத்தில் தான் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் அளித்த புகாரின் அடிப்படையில், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினால் தனது கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மருத்துவப்படி தமக்கு வழங்கப்பட்டு வருகின்றது என்றும், எனவே தனது புகார் மனுவினை திரும்பப்பெற்றுக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

7. காவேரிப்பட்டிணம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. த. செந்தில்குமார் (பொறுப்பு) 8.8.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் பேரூராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 21.7.2012ல் காணாமல் போன திரு. அ. மாதேசன் என்பவரது மனைவிக்கு குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கக் கோரி உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறைக்கு கருத்துரு அனுப்பப்பட்டது. மனுதாரர் திருமதி. மா. சுசீலா தனக்கு குடும்ப ஓய்வூதியத்தில் மருத்துவப்படி வழங்கப்படவில்லையென்று 27.3.2020 நாளிட்ட புகார்மனு மூலம் இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் அளித்துள்ளார். உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை கடித எண்.மூ.மு.எண்.10924–1/பேஓச(2)/2021 நாள் 06.07.2021ன் மூலம் திருமதி. மா. சுசீலா என்பவருக்கு 22.7.2012 முதல் குடும்ப ஓய்வூதியத்துடன் மருத்துவப்படி அனுமதித்து, நிலுவையுடன் வழங்கிட ஒப்பளிக்கப்பட்டது. எனவே, மேற்படி தொகை மனுதாரருக்கு நேரடியாக உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை மூலம் வழங்கப்பட்டுவிட்டது. மேலும், தனியருக்கு தற்போது குடும்ப ஓய்வூதியத்துடன் மருத்துவப்படியும் சேர்த்து அனுமதிக்கப்பட்டுள்ளது என்ற விபரமும் இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவிக்கப்படுகிறது. இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணைக்கான அழைப்பாணையின் அடிப்படையில், தனியருக்கும் பேரூராட்சியின் மூலம் தகவல் அளிக்கப்பட்டது. இதுகுறித்து தனியர் மின்னஞ்சல் மூலம் உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு பதிலளிப்பதாக தகவல் தெரிவித்தார் என்ற விபரமும் பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என்று தெரிவித்துள்ளார்.

8. காவேரிப்பட்டிணம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்துடன் அளித்துள்ள 5.8.2022 நாளிட்ட விளக்க அறிக்கையில், காவேரிப்பட்டிணம் தேர்வுநிலை பேரூராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 21.7.2012ல் காணாமல்போன திரு. அ. மாதேசன் என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் அனுமதித்திட பேரூராட்சியின் மூலம் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை குடும்ப ஓய்வூதியம் கோரும் நபர் பேரூராட்சியில் துப்புரவுப் பணியாளராக பணிபுரிவதால் அவருக்கு குடும்ப ஓய்வூதியத்தில் மருத்துவப்படி அனுமதி இல்லை என்று தெரிவித்தது. தனியருக்கு மருத்துவப்படி மறுக்கப்பட்டது தொடர்பாக உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு தெளிவுரை வழங்கப்பட்டதன் அடிப்பபடையில், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் 6.7.2021 நாளிட்ட கடிதத்தில் 22.7.2021 முதல் குடும்ப ஓய்வூதியத்துடன் மருத்துவப்படி அனுமதித்து நிலுவையுடன் வழங்கிட அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், தனியர் ஓய்வூதியத்தில் மருத்துவப்படி வழங்கப்பபவில்லை என இம்முறைமன்ற நடுவத்தில்

27.3.2020ல் புகார் மனு அளித்துள்ளார் என்றும், இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் 6.7.2021 நாளிட்ட கடிதத்தின்படி 22.7.2012 முதல் மருத்துவப்படி அனுமதித்து நிலுவையுடன் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது என்ற விபரத்தினையும் தெளிபட குறிப்பிட்டுள்ளார். காவேரிப்பட்டிணம் பேரூராட்சி செயல் அலுவலர் தமது அறிக்கையுடன், குறிப்பிட்ட ஆவண நகல்களையும் தனது அறிக்கையுடன் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

9. மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், காவேரிப்பட்டிணம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரது வாக்குமூலம், விளக்க அறிக்கை மற்றும் நேரடி விசாரணையின்போது அளித்த அறிக்கையுடனான ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- மனுதாரரின் புகார் குறித்து உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 6.7.2021 நாளிட்ட கடிதம் மூலம் மனுதாரருக்கு வழங்கப்பட்ட குடும்ப ஓய்வூதியத்துடன் மருத்துவப்படி அனுமதிக்கப்பட்டு, அவருக்கு 22.7.2012 முதல் குடும்ப ஓய்வூதியத்துடன் மருத்துவப்படி நிலுவை அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது ஆவணங்களின்படி தெரியவருகிறது.

- மனுதாரர் அளித்த புகார் மனுவினைத் தொடர்ந்து, இம்முறைமன்ற நடுவத்தினால் கோரப்பட்ட அறிக்கையை காவேரிப்பட்டிணம் பேரூராட்சி செயல் அலுவலர் 8.8.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகும்வரை அளிக்காததை இம்முறைமன்ற நடுவம் கண்டிக்கிறது. பொதுப்பணியாளர் என்ற முறையில், காவேரிப்பட்டிணம் தேர்வுநிலை பேரூராட்சியின் முன்னாள் மற்றும் இந்நாள் செயல் அலுவலர்கள் இப்புகார் குறித்து குறித்த காலத்திற்குள் அறிக்கை அளிக்காதது மிகவும் கண்டனத்திற்குரியது.

- கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட சுபாஸ் சந்திர போஸ் தெருவைச் சேர்ந்த மனுதாரர் திருமதி. மா. சுசீலா, க/பெ அ. மாதேசன் என்பவருக்கு குடும்ப ஓய்வூதியத்துடன் மருத்துவப்படி அனுமதிக்கப்பட்டு, அவருக்கு வழங்கப்படவேண்டிய மருத்துவப்படி நிலுவைத் தொகையும் உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை மூலம் ஒப்பளிக்கப்பட்டு, தனியர் ஓய்வூதியம் பெற்றுவருகிறார் என்பதும் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைத்துள்ள 8.8.2022 நாளிட்ட கடிதம் மூலம் உறுதியாகிறது.

10.மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், இப்புகார் மனு மீதான நடவடிக்கையினை இத்துடன் முடித்துவைக்கலாமென இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2022ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் 18ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/- x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திருமதி. மா.சுசீலா, க/பெ அ. மாதேசன்,
13-B சுபாஸ் சந்திரபோஸ் தெரு, காவேரிப்பட்டிணம், கிருஷ்ணகிரி மாவட்டம்-735 112
செயல் அலுவலர்,
காவேரிப்பட்டிணம் தேர்வுநிலை பேரூராட்சி, காவேரிப்பட்டிணம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்-735 112
பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர், தருமபுரி மண்டலம், தருமபுரி
பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை-28
இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை-600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

-/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/-

23/8/22

செயலர்

22.8.22

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை-600 032